


காரைக்கால் தெற்கு தொகுதியில் வெற்றி பெற்ற கழக வேட்பாளர் நாஜிம் தேர்தல் அதிகாரி பூஜாவிடம் அதற்கான சான்றிதழைப் பெற்றார்.

### உச்சநீதிமன்ற

# பதிவாளர் அலுவலகத்திற்கு தலைமை நீதிபதி கண்டனம்!

## அமலாக்கத்துறைக்கு நோட்டீஸ் அனுப்பும் உத்தரவை அமல்படுத்தாததால்!

புதுடெல்லி, மே 6-

அமலாக்கத் துறைக்கு நோட்டீஸ் அனுப்பும் உத்தரவை செயல்படுத்தாத உச்சநீதிமன்ற பதிவாளர் அலுவலகத்திற்கு தலைமை நீதிபதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் 37 ஆயிரம் கோடி ரூபாய் வழக்கு ஒன்றில் அமலாக்கத்துறையை வழக்கில் இணைத்து கடந்த மார்ச் மாதம் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அமலாக்கத்துறை பதிலளிக்க அன்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, அமலாக்கத்துறைக்கு இதுவரை நோட்டீஸ் அனுப்பவில்லை என்பதை மனுதாரர் வழக்கறிஞர் சுட்டிக் காட்டினார். அப்போது, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு உச்சநீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தை கடுமையாக கண்டித்தது. கடந்த முறை நோட்டீஸ் அனுப்ப தெளிவான உத்தரவு பிறப்பித்ததை நீதிபதிகள் சுட்டிக்காட்டினர். பதிவாளர் அலுவலகத்தின் செயல்பாடு மிகவும் மோசமானது என்றும் ஒவ்வொருவரும் தங்களை உச்ச நீதிமன்ற சூப்பர் தலைமை நீதிபதிகளாக நினைத்துக் கொண்டு செயல்படுகிறார்கள் என்று தலைமை நீதிபதி கடும் கண்டனம் தெரிவித்தார்.

பின்னர் இந்த விவகாரத்தில் உண்மை கண்டறியும் குழுவை அமைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று தலைமை பதிவாளருக்கு தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது. பதிவாளர் அலுவலகத்தை இதற்கு முன்னரும் தலைமை நீதிபதி உள்பட சில நீதிபதிகள் கண்டித்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

### கோடை காலங்களில்

# கால்நடைகளை பாதுகாப்பாக பராமரிப்பது எப்படி?

## கால்நடை பராமரிப்புத்துறை விளக்கம்!

சென்னை, மே 6 -

கோடைகாலங்களில் கால்நடைகளை பாதுகாப்பாக பராமரிப்பது எப்படி? என்பது குறித்து கால்நடை பராமரிப்புத் துறை வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. கால்நடைகளை பராமரிப்பது எப்படி? இதுதொடர்பாக கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழ்நாட்டின் கிராமப்புற பொருளாதார வளர்ச்சியில் கால்நடை வளர்ப்பு முக்கிய பங்காற்றி வருகிறது. பால், இறைச்சி, முட்டை உள்ளிட்ட உணவுப் பொருட்களின் உற்பத்தியை உயர்த்துவதோடு, விவசாயிகளின் கூடு தல் வருமானத்துக்கும் கால்நடை வளர்ப்பு உறுதுணையாக உள்ளது. குறிப்பாக கோடைகாலங்களில் அதிக ரிக்கும் வெப்ப நிலை காரணமாக கால்நடைகள் வெப்ப அயர்ச்சிக்கு ஆளாகி அவற்றின் உடல்நலம் மற்றும் உற்பத்தி திறன் பாதிக்கப்படுகின்றன. இதனால் பால் உற்பத்தி குறைதல், வளர்ச்சி பாதிப்பு, இனப்பெருக்க திறன் குறை தல் மற்றும் சில நேரங்களில் உயிரிழப் புகளும் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே கோடைகாலங்களில் கால்ந டைகளை பராமரிப்பது எப்படி? என்பது குறித்த வழிமுறைகள் வருமாறு: -

**குடிநீர் கொடுக்கவேண்டும்!**

★ கால்நடைகளுக்கு ஒரு நாளைக்கு 4 அல்லது 5 முறையாவது குடிப்பதற்கு உகந்த குடிநீர் கொடுக்கவேண்டும். கறவை மாடுகளுக்கு எப்போதும் தண்ணீர் கிடைக்கும் வகையில் தண்ணீர் தொட்டியை அமைக்கவேண்டும்.

★ நீர்தெளிப்பான் அமைப்பது, குளிர்ந்த நீரினை கால்நடைகளின் மேல் தெளிப்பது, மின்விசிறி அமைப்பது ஆகியவை மூலம் கோடை வெப்பத் தினால் ஏற்படும் அயர்ச்சியினை தவிர்க்கலாம். மேலும் 1 மாட்டுக்கொட்டகையின் கூரைக்கு மேலேயும் நீர் தெளிப்பான் அமைக்கலாம். இதனால் பால் உற்பத்தி அதிகரிக்கும்.

★ அடைக்கப்பட்ட அல்லது நெருக்கமான இடத்தில் கால்நடைகளை கட்டவேண்டாம். கால்நடை தீவனங்களை வெட்டவெளியில் போடவேண்டாம்.

**உச்சிவெயிலில் தீவனம் கூடாது!**

★ ஆடுகளை காலை 6 மணி முதல் 11 மணி வரையிலும், பிற்பகல் 3 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் மேய்ச்சலுக்கு அனுப்பவேண்டும்.

ஆடுகளுக்கு அம்மை, தொண்டை அடைப்பான் நோய், கோமாரி நோய், ஆட்டுக்கொல்லி நோய் முதலியவற்றிற்கு தடுப்பூசிபோட வேண்டும்.

★ கோழிகளுக்கு உச்சி வெயில் நேரத்தில் தீவனம் வைக்காமல், இரவு, விடியற்காலையில் தீவனம் அளிக்க வேண்டும்.

★ பறவைகளுக்கு போதுமான நிழற்கூரைகள் அமைத்து கொடுத்து போதுமான நீர்க் கொடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

# லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழப்பு!

## 4 மீட்புப் பணியாளர்கள் காயம்!

பெய்ரூட், மே.6-

ஹிஸ்புல்லாவுடனான போரில் ஒரு நிலையற்ற போர்நிறுத்தம் இருந்த போதிலும், இஸ்ரேல் அந்நாட்டின் மீதான தனது தாக்குதல்களைத் தொடர்ந்த நிலையில், தெற்கு லெபனான் மீது ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதாகவும், நான்கு மீட்புப் பணியாளர்கள் காயமடைந்ததாகவும் லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. தனித்தனி அறிக்கைகளில், அரப்சலிம் மீதான தாக்குதலில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஒரு குழந்தை உட்பட மூவர் காயமடைந்ததாகவும், ஸ்ரீஃப்பா மீதான மற்றொரு தாக்குதலில் ஹிஸ்புல்லாவுடன் தொடர்புடைய இஸ்லாமிய சுகாதாரக் குழுவைச் சேர்ந்த நான்கு மீட்புப் பணியாளர்கள் உட்பட ஐந்து பேர் காயமடைந்ததாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

“இத்தொடர் தாக்குதல்களைத் தான் வன்மையாகக் கண்டிப்பதாக அமைச்சகம் மீண்டும் தெரிவித்துள்ளது. மேலும், மோதல் மண்டலங்களில் நடைபெறும் தாக்குதல்களால் ஏற்படும் எத்தகைய ஆபத்திலிருந்தும் மருத்துவ வசதிகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து ஜெனிவா உடன்படிக்கையின் 19வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதை இது நினைவுகூர்கிறது. ஆனால், தற்போது அங்கு நிகழ்ந்துகொண்டிருப்பது இதற்குச் முற்றிலும் நேர்மாறாக இருப்பதாக தெரிவித்தது.

தெற்கு லெபனானில், தான் ஆக்கிரமித்துள்ள பகுதிக்கு அப்பால் அமைந்துள்ள கிராமங்களுக்காக, இஸ்ரேலிய இராணுவம் ஞாயிற்றுக்கிழமையன்று புதிய வெளியேற்ற எச்சரிக்கைகளை வெளியிட்டது. இந்த எச்சரிக்கையானது 10க்கும் மேற்பட்ட கிராமங்களையும் நகரங்களையும் உள்ளடக்கியுள்ளது; இதில், லித்தானி நதிக்கு வடக்கே அமைந்துள்ள இந்நதியின் தெற்கே இஸ்ரேல் தனது படைகளை நிறுத்தியுள்ளது.

அரப்சலீம் மற்றும் ஸ்ரிஃப்பா ஆகிய இடங்களும் இந்த எச்சரிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தன. தெற்கு லெபனான் முழுவதும், வெளியேற்ற எச்சரிக்கையில் குறிப்பிடப்படாத நகரங்கள் உட்படப் பல இடங்களின் மீதும் இஸ்ரேல் தொடர் தாக்குதல்களை நடத்தியதாக, லெபனானின் அரசுக்குச் சொந்தமான தேசிய செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. ஏப்ரல் 17 முதல், இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையே ஒரு நிலையற்ற போர்நிறுத்தம் நடைமுறையில் உள்ளது; இது ஹிஸ்புல்லா போராளி அமைப்பிற்கும் இஸ்ரேலிய இராணுவத்திற்கும் இடையிலான வன்முறையை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

புதன்கிழமையன்று, இஸ்ரேலின் கட்டுப்பாட்டுப் பகுதியைக் குறிக்கும் “மஞ்சள் கோட்டிற்கு அப்பால்” உள்ள ஹிஸ்புல்லா நிலைகள் மீது தாக்குதல் நடத்தப்போவதாக இஸ்ரேலியப் படைத் தளபதி ஐயல் ஜமீர் எச்சரித்தார். “மஞ்சள் கோட்டிற்கு அப்பாலும், லிட்டானி நதிக்கு வடக்கிலும் எங்கு, எத்தகைய அச்சுறுத்தல் எங்கள் சமூகங்களுக்கோ அல்லது எங்கள் படைகளுக்கோ எதிராக எழுந்தாலும், அது முறியடிக்கப்படும்,” என்று இஸ்ரேலியப் படைகளை ஆய்வு செய்தபோது அவர் கூறினார். “திட்டமிடப்பட்ட, உடனடியான அல்லது நடைபெற்றுக்கொண்டிருக்கும் தாக்குதல்களுக்கு” எதிராக நடவடிக்கை எடுக்கும் உரிமையை, போர்நிறுத்த ஒப்பந்தத்தின் வாசகங்கள் இஸ்ரேலுக்கு வழங்குகின்றன.

# தெற்கு ரயில்வே: மின் இணைப்புப் பராமரிப்பில் சாதனை!

சென்னை, மே 6–

ரயில்வே தனது மின் இணைப்பு பராமரிப்புப் பணிகளில் குறிப்பிடத்தக்க சாதனை படைத்துள்ளது. கடந்த 2025–2026 நிதியாண்டில் மின் இணைப்பு சாதனங்களில் ஏற்பட்ட கோளாறுகளின் எண்ணிக்கை வெறும் 3 ஆக குறைந்துள்ளது. தெற்கு ரயில்வே மின் இணைப்பு பராமரிப்பில் சாதனை படைத்துள்ளது.

இதற்கு முந்தைய ஆண்டான 2024–2025இல் இதே சாதனங்களில் 13 கோளாறுகள் பதிவாகியிருந்தன. அதாவது ஒரே ஆண்டில் 77 சதவீதம் கோளாறுகள் குறைந்துள்ளன. இந்த சாதனையின் மூலம் தெற்கு ரயில்வே, நாட்டிலேயே சிறந்த மண்டலங்களில் ஒன்றாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

இன்று ரயில்கள் டீசல் இல்லாமல் மின்சாரத்தில் இயங்குகின்றன. தண்டவாளத்திற்கு மேலே கம்பிகள் வழியாக மின்சாரம் பாய்ந்து ரயிலை இயக்குகிறது. இந்த மின் கம்பிகளும் அதனுடன் தொடர்புடைய சாதனங்களும் சேர்ந்தே TRD (Traction Distribution) சாதனங்கள் என அழைக்கப்படுகின்றன.

ரயில் பாதைகள் இப்போது முழுமையாக மின்சார மயமாக்கப் பட்டுள்ளதால், இந்த சாதனங்கள் ஒவ்வொரு பாதையிலும் பரவியுள்ளன. இவற்றில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் அந்தப் பகுதியில் ரயில் இயக்கமே முழுமையாக நிற்கும். அது மட்டுமல்ல, சிக்னல் விளக்குகளும் பாதிக்கப்படும். அதனால் ரயில்கள் தாமதமாகும், பயணிகள் சிரமப்படுவார்கள்.

தெற்கு ரயில்வே பொது மேலாளர் சிங் மற்றும் தலைமை மின் பொறியாளர் கணேஷ் ஆகியோரின் தொடர் கண்காணிப்பும், வழி காட்டுதலும் இந்த சாதனையில் முக்கியப் பங்கு வகித்தன. ஒவ்வொரு மண்டல ரயில்வே மேலாளரும் தங்கள் பகுதியில் உள்ள சாதனங்களை சரியான நேரத்தில் பராமரிக்கின்றார்களா என்பதை தொடர்ந்து கண்காணித்தனர். ரயில்வே ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு நிறுவனமான RDSO வழங்கிய சிறப்புப் பராமரிப்பு வழிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றினர். இதன் விளைவாக 2025–2026 நிதியாண்டு முடியும் வரை எந்த ஒரு சாதனமும் பராமரிப்பு தவறாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.

இந்த சாதனையால் பயணிகளுக்கு நேரடியான பலன்கள் கிடைத்துள்ளன. ரயில்கள் நேரத்தோடு புறப்படுகின்றன, நேரத்தோடு வந்து சேருகின்றன. மின் கோளாறு காரணமாக ரயில் நடுவழியில் நிற்கும் சிக்கல் குறைந்துள்ளது. பயணிகள் தொடர்ந்து அலைக்கழிக்கப்படும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளது.

அதிகப் பயணிகள் நெருக்கம் உள்ள பிரிவு களிலும் பாதுகாப்பான பயணம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த சாதனையை தெற்கு ரயில்வே தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதன் மூலம் பயணிகளுக்கு இன்னும் சிறந்த சேவையை வழங்க முடியும் என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



**கோ**ட்டான்கள் நாட்டாண்மை
செய்கின்ற சபையிலே
குயில்வந்து நிற்க லாமா?
கூழாங்கல் விலைபோகும்
சந்தையில் வைரத்தைக்
கொண்டுபோய் விற்க லாமா?

காட்டாட்சி நரிகளின்
தர்பாரில், சிங்கத்தின்
கர்ச்சனை ஒலிக்க லாமா?
கடுமுள்ளம் பன்றிகள்
நடுவிலே மயில், வண்ணக்
கலாபம் விரிக்க லாமா?

நாட்டாட்சி நல்லாட்சி
நடைபெற்ற கோட்டையில்
நடிகனின் ரசிகர் கூட்டம்!
நகர்த்திடும் கயிறுகள்
தில்லியின் கைகளில்!
நடக்கட்டும் பொம்ம லாட்டம்!

வீட்டோடு நீ கொஞ்சம்
ஓய்வெடு தலைவனே!
வேதனை துளியும் வேண்டாம்!
வேடம்நம் மக்கட்குப்
பாடம் வழங்கிடும்
விரைவில்! நீ கலங்க வேண்டாம்!



... கவிச்சுடர் கவிதைப்பித்தன்.

# புதுச்சேரியில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் - கருத்தரங்கம்!

புதுச்சேரி, மே 6 -

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா படத் திறப்பு, மலர் வணக்கம், கருத்தரங்கம் என பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மே தினத்தை முன்னிட்டு புதுச்சேரி பெரியார் படிப்பகத்தில் திராவிடர் கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து ‘புதியதோர் உலகு செய்வோம்’ என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. பகுத்தறிவாளர் கழக மாநில அமைப்பாளர் கு. இரஞ்சித்குமார் தலைமையில் புதுச்சேரி பகுத்தறிவாளர் கழகச் செயலாளர் பா.குமரன் வரவேற்புரை ஆற்றினார்.

தொடர்ந்து புதுச்சேரி தன்னுரிமை கழகத் தலைவர் தூ.சடகோபன், கொம்யூன் கழகப் பொறுப்பாளர் இராம.சேகர், அரசு ஊழியர் அய்க்கியப் பேரவைத் துணைப் பொதுச் செயலாளர் மணித். கோவிந்தராஜ், புதுவை இளைஞர் அமைதி மையத்தின் தலைவர் செ.ஆதவன், புதுச்சேரி பகுத்தறிவாளர் கழகத் தலைவர் நெ.நடராசன், திராவிடர் கழக மாவட்டத் தலைவர் வே.அன்பரசன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் படத்தை பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத் துணைச் செயலாளர் வி.இளவரசி சங்கர் திறந்து வைத்து உரையாற்றினார்.

அண்மையில் மறைந்த திராவிடர் இயக்கப் பாடகர் தேனிசை செல்லப்பா அவர்களின் படத்தை திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் முனைவர். துரை. சந்திரசேகரன் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நாற்பதாண்டு களுக்கும் மேலாக இலக்கியப் பணி ஆற்றி வரும் திருக்குறள் சண்முகம் அவர்களுக்கு சால்வை அணிவித்து பெரியார் சிலையை நினைவுப் பரிசாக வழங்கினார்.

விடுதலை வாசகர் வட்டத் தலைவர் கே.மு. தமிழ்ச்செல்வன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

### நேபாளத்தில் முந்தைய இடைக்கால அரசால் செய்யப்பட்ட

# 1500க்கும் மேற்பட்ட நியமனங்கள் ஒரே நாளில் ரத்து!

## அந்நாட்டு அரசு அதிரடி!

காத்மாண்டு, மே.6-

நேபாளத்தில் அரசியல் உள்நோக்கங்களுடன் முந்தைய இடைக்கால அரசால் செய்யப்பட்ட 1500க்கும் மேற்பட்ட நியமனங்களை ஒரே நாளில் ரத்து செய்வதற்கான அரசாணையை அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ளது. அமைச்சரவை பரிந்துரையின் பேரில், இந்த ஆணையை அதிபர் ராம்சந்திர பௌடேல் சனிக்கிழமை வெளியிட்டார். இதன் காரணமாக நிர்வாகம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல துறைகள் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன. கடந்த ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற இளைஞர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நேபாளத்தின் அப்போதைய பிரதமர் கே.பி.சர்மா ஒலி அரசு கலைக்கப்பட்டது.

இடைக்கால பிரதமராக சுசீலா கார்க்கி நியமிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பாலேந்திர ஷா தலைமையிலான ராஷ்டரிய சுதந்திர கட்சி ஆட்சிக்கு வந்தது.

இந்நிலையில், முந்தைய இடைக்கால அரசால் நியமிக்கப்பட்ட 1,594 பேரின் பதவிகள் நீக்கம் செய்யப்படுவதாகவும், அவர்களின் பதவி காலம் அல்லது நியமன விதிமுறைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல், மார்ச் 26 ஆம் தேதிக்கு முன் செய்யப்பட்ட அனைத்து நியமனங்களும் ரத்து செய்யப்படுவதாகவும் ஆணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கை அரசு நிறுவனங்கள், ஒழுங்குமுறை அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஊடக அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைப் பாதித்துள்ளது. அரசியல் உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட இந்த தியமனங்களை திருத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் என அரசுத் தரப்பில் இதற்கு விளக்கம் அளிக்கப்பட்டது.